## முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

## O.S.No.19/2018

2025 ஆம் வருடம் ஜூலை மாதம் 7ம் தேதியன்று **PW.1** ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.**, முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி (எ) விஜயபுரி | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் வாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு 7.6.1908 ரங்கய்ய கவுண்டர் குமாரசாமியிடம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரம் பதிவு நகல் **வாசாஆ 1**. 12.2.1964 ல் பெரியண்ண கவுண்டர் மற்றும் பலருக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் **வாசாஆ 2.** 5.4.1956 பெரியண்ண கவுண்டர் ரங்கசாமி கவுண்டருக்கு போகியத்திற்கு விட்டதற்கான பதிவு நகல் **வாசாஆ 3**. 19.5.1972 சின்ன முத்துசாமி கவுண்டர் கொழந்தையம்மாள் வகையறாவிடம் இருந்து கிரயம் பெற்ற கிரைய பத்திரத்தின் அசல் **வாசாஆ 4**. 12.7.1982 கொழந்தாயம்மாள் மற்றும் பலருக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் **வாசாஆ 5**. 16.2.1982 சின்னசாமி

இந்திராணியிடம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் பதிவு நகல் **வாசாஆ 6.** 21.1.1987 பெரியண்ண கவுண்டர் கொளந்தாயம்மாள் வகையறாவிடம் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் அசல் **வாசாஆ 7.** 12.4.1955 வள்ளியம்மாள் ரங்க கவுண்டரிடம் இருந்து கிரையம் பெற்ற பதிவு நகல் **வாசாஆ** 8. 19.6.2000 பெரியண்ண் கவுண்டர் வாதி பிரதிவாதி அனைவரும் ஒரு ராசப்ப கவுண்டர் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 9.** பெரியண்ண கவுண்டரின் இறப்பு சான்றிதழ் **வாசாஆ 10. அ வ எண்.** 222/2010 பிராது சார்பு நகல் **வாசாஆ 11**. மேற்கண்ட வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்த பாகப்பிரிவினை பத்திரத்தின் நகல் **வாசாஆ 12.** வாதி பெயரில் உள்ள கந்தாய ரசீதுகள் **வாசாஆ** 13 முதல் **வாசாஆ** 16. வாதியின் வீட்டிற்கு பொன்முடி பஞ்சாயத்தால் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் **வாசாஆ** 17 **மற்றும் வாசாஆ** 18. முருகன் போர்வெல் வழங்கிய ரசீது **வாசாஆ** 19. செல்வம் டிரேடர்ஸ் சப்மெரிசிபள் பம்ப் வாங்கிய ரசீது **வாசாஆ** 20. ஆக்குவா சப் இன்ஜினியரிங் பழுது சரி செய்யப்பட்ட ரசீதுகள் **வாசாஆ** 21 **மற்றும் வாசாஆ** 22. பழுது செய்ததற்கான கட்டண ரசீது **வாசாஆ 23.** பெருந்துறை விஜயலட்சுமி எலெக்டிக்கல்ஸ் வழங்கிய பில் **வாசாஆ** 24. அதை பழுது செய்ததற்கான ரசீது **வாசாஆ 25.** மகாலட்சுமி டிரேடர்ஸ் வழங்கிய ரசீது **வாசாஆ 26**. 30.1.1994 தேதியில் பாத்திய உடன் படிக்கை அசல் **வாசாஆ** 27 (வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ஆக தாக்கல் செய்யப்படுகிறது.